முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 643**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.07.2021, சனிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகளாக்க உலகமக்களை ஒன்றிணைத்து
ஞானவழிகாட்டும் தேசிகனே போற்றி
ஞாலமதில் சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே அரங்கன் நீ கேட்க
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
கனிவுகொண்டு யான் உன்னுள் கலந்திருக்க
கந்தவேலன் யானும் உன்வழி உலகோர்க்கு அருள்புரிவேன்
3. அருளாக உன் கரம்பட உலக மக்களுக்கு
அழியாமை என்கின்ற ஞான தீட்சை தந்தருள
பெருமைபட உன்னை தொடரும் மக்களெல்லாம்
பூவுலகில் ஞானிகளாகி சிறக்கக்கூடும்
4. கூடவே குறைவின்றி உன் வழி தர்மத்தை
குவலயம் எங்கும் யான் நிரப்பி வர
நாடெங்கிலும் இந்த தர்மபலம் பெருகபெருக
ஞான ஆட்சிக்காலமாக உலகம் மாற்றம் பெறும்
5. மாற்றத்தை உன்வழி யானே நடத்தி
மக்களை பாதுகாப்பேன் அழிவினின்று மீட்பேன்
ஆற்றல்பட பேரிடர்கள் அனைத்தையும்
அரங்கன் உன் தர்மத்தை கொண்டே அகற்றுவேன்
6. அகற்றியே உலகோர்க்கு பாதுகாப்பு தந்து
அனைவரும் உண்மை ஆன்மீக ஞானம் வழி வந்து
குறைவில்லாத சைவநெறியை உலகமெங்கும் ஏற்று
குவலயத்தார் ஜீவதயவு பட நடக்கநடக்க
7. நடக்கவே ஞானிகள் ஆட்சி மாறும்
நாடெங்கிலும் ஞானசித்தர்கள் வழிபட்டு
இடரில்லாத ஞானசித்தர் ஆட்சி காலமாக
இந்த உலகம் கண்டு ஞானயுகமாற்றத்தையும் பெறும்
8. மாற்றம் தரும் மகாயோகி உன் சக்திவழி
மண்ணுலகம் சடுதி மேலும்
ஆற்றல்பட அரங்கன் உன் தொண்டர்படையால்
அகிலமே உலகமாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–